


**14. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. தூய்மை எரிசக்தி திட்டங்களை இந்தியா திறம்பட நிறைவேற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு.நரேந்திரமோடி 4 நாள் அரசுமுறை பயணமாக ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் நாடுகளுக்கு நாளை புறப்படுகிறார்.

3. தமிழ்மொழியின் பெருமையை பிரதமர் உலகெங்கும் கொண்டு சென்றுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

5. இந்திய தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி தரம்சாலாவில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

எரிசக்தி பாதுகாப்பு தற்போதைய காலத்தின் கட்டாயம் என குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப் படுவதை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விருதுகளை வழங்கி பேசிய அவர், சேமிக்கப்படும் ஒவ்வொரு யூனிட் எரிசக்தியும், இயற்கை மீதான நமது பொறுப்புணர்வையும், வருங்கால சந்ததியினருக்கான அக்கறையையும் எடுத்துரைப்பதாக கூறினார்.

எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தூய்மை எரிசக்தி திட்டங்களை இந்தியா திறம்பட நிறைவேற்றுவதாக கூறிய குடியரசு தலைவர், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்கு முன்பாகவே நாட்டில் கரியமிலவாயு வெளியேற்ற குறைப்பு மற்றும் தூய்மை எரிசக்தி திட்ட இலக்குகள் நிறைவேற்றப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யசோ நாயக் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 4 நாள் அரசுமுறை பயணமாக ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் நாடுகளுக்கு நாளை புறப்படுகிறார்.

முதல்கட்டமாக ஜோடார்ன் செல்லும் பிரதமர், இருநாடுகளுக்கு இடையே வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இருநாடுகளுக்கு இடையே 75 ஆண்டுகால அரசியல் நட்புறவு மற்றும் வலுவான கலாச்சார நட்புறவு நீடிக்கும் நிலையில் வர்த்தகம்,

உணவு பாதுகாப்பு, மக்கள் தொடர்பை மேலும் வலுப்படுத்த பிரதமரின் இந்த பயணம் வழிகோலும்.

அந்நாட்டின் 3-வது மிகப்பெரிய வர்த்தக நாடாக இந்தியா திகழும் நிலையில் உரம், கனிமங்கள், ஜவுளி உள்ளிட்ட துறைகளில் விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

சி.பி.ராதா கிருஷ்ணன்

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரை கவுரவிக்கும் வகையில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் புதுதில்லியில் இன்று அவரது நினைவு தபால் தலையை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், நாடுமுழுவதும் உள்ள அறியப்படாத தலைவர்களின் பெயர்களை வெளிக்கொணர பிரதமர் முயற்சி எடுத்து வருவதை சுட்டிக்காட்டினார்.

தமிழ்மொழியின் பெருமையை பிரதமர் உலகெங்கும் கொண்டு சென்றுள்ளதாக கூறிய அமைச்சர், பெரும்பிடுகு முத்தரையரின் தபால் தலை வெளியிடப்பட்டதற்கு தமிழக மக்களின் சார்பில் நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

மீனவர் நலனுக்காக மத்திய அரசு 60 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதை சுட்டிக்காட்டிய திரு.எல்.முருகன், மீன்வளத்தை பெருக்க கடல்பாசி திட்டம் செயல்படுத்தப்படுவதாக எடுத்துரைத்தார்.

நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன், பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

நாட்டின் வளர்ச்சியில் ஊரக பகுதிகளை இணைப்பதில் அஞ்சல் துறை முக்கிய பங்காற்றுவதாக மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

கெல்ஹாபூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆறரை லட்சம் கிராமங்களில் செயல்படும் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட அஞ்சலகங்கள் மற்றும் தபால் ஊழியர்கள் மூலம் காப்பீடு, வங்கி சேவைகள் கிராமப்புற மக்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கே கொண்டுசெல்லப் படுவதாக தெரிவித்தார்.

இந்திய அஞ்சல் துறையை நவீன புத்தாக்கம் மற்றும் நம்பகத்தன்மையுடன் கூடிய வலுவான சேவை மையமாக மேம்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தொலைநோக்கு திட்டத்தின் கீழ் சேவை மனப்பான்மையுடன் தபால் விநியோகம் தொடங்கி குடிமக்கள் சார்ந்த சேவைகளை விரைவாகவும், பாதுகாப்பாகவும் அஞ்சலகங்கள் மக்களிடம் கொண்டுசேர்ப்பதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிராஜ் சிங்

இந்திய கைவினைப் பொருட்களை உலக நாடுகளில் சந்தை படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய கைவினை கண்காட்சியை தொடங்கி வைத்து பேசியஅவர், இளையோர்கள் பாரம்பரிய கைவினை பொருட்களை பற்றிய புரிதலுடன் உலகளாவிய பார்வையாளர்களுக்கு ஏற்ற தயாரிப்புகளை உருவாக்குவதாக பெருமிதம் தெரிவித்தார்.

வரும் 21-ம் தேதிவரை நடைபெறும் இந்த கண்காட்சியில் பல்வேறு மாநிலங்களின் பிரத்யேக மரபுகளை பறைசாற்றும் கைவினை பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

S.I.R. - BJP

தமிழகம், கேரளம் உட்பட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பாக காங்கிரஸ் கட்சி தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாக பி.ஜே.பி. குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. செய்தித் தொடர்பாளர் சம்வித் பத்ரா இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் விரிவான விவாதங்கள் இடம்பெற்றதை சுட்டிக்காட்டினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, எதிர்கட்சியினரின் அனைத்து கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம் அளித்ததாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

இதனிடையே தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் கணக்கீட்டு படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

இதனடிப்படையில் மாநிலத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 19-ம் தேதி வெளியாகும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தென்காசி மாவட்டத்தில் கணக்கீட்டு படிவங்களை பதிவேற்றம் செய்யும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ஆட்சித்தலைவர் திரு. கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் வாக்காளர்கள் இந்த இறுதி வாய்ப்பை முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு வாக்குச்சாவடி நிலை அலுவலர் திரு.குருபிரசாத் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டி பட்டியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், பல்வேறு சிக்கலான சவாலான சூழ்நிலையிலும் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்பட்டதாக கூறினார்.

தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் விடுபட்ட தகுதியுடையவர்களுக்கும், இத்திட்டத்தின் பலன்கள் சென்று சேர நடவடிக்கை எடுக்கப்படும் என கூறிய முதலமைச்சர் தற்போது ஒருகோடியே 30 லட்சம் பேர் இத்திட்டதின் கீழ் பயனடைந்து வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

சக்கரபாணி

தமிழகத்தில் இதுவரை 353 தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 2 லட்சத்து 84 ஆயிரத்து 754 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட 712 நபர்களுக்கு பணி நியமன

ஆணைகளை வழங்கி பேசியஅவர், சுயஉதவிக் குழுக்களுக்கு 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளையும் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖

மாரத்தான் போட்டிகள்

இந்திய கடற்படை சார்பில் முதலாவது Half மாரத்தான் போட்டிகள் சென்னையில் இன்று நடைபெற்றன.

போதையில்லா தமிழகம், சுகாதாரம் மற்றும் தோழமையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெறும் இப்போட்டியில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

5, 10, 21 கிலோ மீட்டர் என 3 பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் போதைப்பொருள் வேண்டாம் மாரத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

வேலூர் வாய்ஸ்

வேலூர் மாவட்டம் விருஞ்சிபுரம் அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் ஆலயத்தில் கார்த்திகை கடைஞாயிறு விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, வரும் 17-ம் தேதி வேலூர் வருவதை முன்னிட்டு பொற்கோவில் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி அறிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மாணாக்கர் பிரதமரின் உயர்கல்வி உதவித்தொகை பெற வரும் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு. சரவணன் தெரிவித்துள்ளார்.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் இளங்கலை பயிலும் மாணாக்கர் முதுநிலை படிப்பை தொடர இதற்கு விண்ணப்பிக்கலாம்.

சிவகங்கை மாவட்டத்தில் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பர பேனர்களை நாளைக்குள் அகற்ற ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி உத்தரவிட்டுள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் நீர்நிலைகளில் வாழும் பறவைகள் கணக்கெடுக்கும் பணி வரும் 27-ம் தேதிமுதல் நடைபெறுகிறது.

சத்திய மங்கலம் புலிகள் காப்பகம், மற்றும் ஈரோடு வனக்கோட்ட பகுதி ஏரி, குளம் உள்ளிட்ட 21 இடங்களில் இப்பணிகள் நடைபெறும்.

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று காலைமுதல் வினாடிக்கு 9 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

டெல்டா விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று இந்நடவடிக்கை.

திருச்செந்தூரில் கடல் சீற்றத்துடன் காணப்படும் நிலையில் கோவில் முன்பு 5 அடி ஆழத்திற்கு கடலில் பள்ளம் ஏற்பட்டுள்ளதால் பக்தர்கள் சிரமத்திற்கு உள்ளாயினர்.

கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் ஆங்கில பத்தாண்டை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் குடில் அலங்காரத்திற்கு தேவையான பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி தரம்சாலாவில் இன்று நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ள நிலையில் இன்றைய போட்டி கிரிக்கெட் ரசிகர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட் - U19

துபாயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானிற்கு எதிராக முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 34 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 185 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖